**தலைப்பு 235 – சட்ட ஆணைக்குழுத் திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

சட்ட ஆணைக்குழுத் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன்கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் சட்ட ஆணைக்குழுத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூன் 15 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, சட்ட ஆணைக்குழுத் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இவ்வறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் உள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் சட்ட ஆணைக்குழுத் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்த அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதை மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தன எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் செய்யப்பட்டிருந்த பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 26 ஆந் திகதிய 2021/03 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிகாட்டியின் 3.2 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைக்கும் இறுதி திறைசேரி கணக்குகளில் காண்பிக்கப்பட்டுள்ள தொகையுடன் இணங்குகின்றமை உறுதிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் சிகாஸ் இணையத்தை ஈடுபடுத்துவதன் மூலம் பெறப்பட்ட நிதியல்லா சொத்துக்களின் கூற்று (SA-82 படிவத்தில்) ஆண்டின் இறுதியில் மீதியொன்று காணப்படாதிருந்த போதிலும் நிதிநிலைமைக் கூற்றின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் | இந்த திணைக்களம் சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தை பயன்படுத்தாமையால் நிதியல்லா சொத்துக்கள் தொடர்பான கூற்றில் இணைப்பாக சமர்ப்பிக்க முடியவில்லை. | நிதியல்லா சொத்துக்கள் தொடர்பான படிவம் நிதிக்கூற்றுக்களில் இணைக்கப்பட வேண்டியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களில் உள்ள எண்ணிக்கை இறுதி திறைசேரி கணக்குகளில் காண்பிக்கப்பட்டுள்ள தொகையுடன் இணங்கியிருத்தல் வேண்டும். |

நிதியல்லா சொத்துக்களின் மீதியாக ரூபா 25,086,952 காண்பிக்கப்பட்டிருந்தது.
அவ்வாறே SA-82 படிவம் நிதிக்கூற்றுக்களுடன் இணைக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) முற்பண பெறுவனவு மற்றும் செலுத்துகைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| ஆண்டில் சம்பளத்திலிருந்து அறவிடப்பட்டு திறைசேரிக்கு அனுப்பப்பட்ட ரூபா 775,445 தொகையான கடன் (முற்பணம்) தவணைப் பணம், காசுப்பாய்ச்சல் கூற்றில் முற்பண பெறுவனவு மற்றும் கொடுப்பனவாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | அரச கணக்குகள் திணைக்களத்தின் ஆலோசனையின் பிரகாரம் முற்பணத் தவணைப் பணம் கட்டுநிதி இணக்கக் கூற்றில் ஏனைய தலைப்பினால் ‘‘பீ’’ கணக்கில் மேற்கொள்ளப்பட்ட செலவினத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. | 2021.11.26 ஆந் திகதிய 2021/03 ஆம் இலக்க நிதிக்கூற்று தயாரித்தல் தொடர்பாக அரச கணக்குகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் காசு மற்றும் குறுக்குப் பதிவு இரண்டையும் உள்ளடக்கி காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படல் வேண்டும். |

**(இ) மானியம் மற்றும் மாற்றல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் மானியம் மற்றும் மாற்றல்கள் ரூபா 67,732 தொகை காசு செலவினத்தின் கீழ் மானியங்கள் மற்றும் மாற்றல்களாக தனியாக காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் அப்பெறுமதி ஆளணி வேதனங்கள் மற்றும் செயற்பாட்டுச் செலவினங்களில் சேர்த்து காண்பிக்கப்பட்டிருந்தது. | மானியங்கள் மற்றும் மாற்றல்கள் ஆளணி வேதனங்கள் மற்றும் செயற்பாட்டு செலவினத்தின் கீழ் அரச கணக்குகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ஆலோசனையின் பிரகாரம் உள்ளடக்கப்பட்டிருந்தது என அறியத்தருகின்றோம். | 2021.11.26 ஆந் திகதிய 2021/03 ஆம் இலக்க நிதிக் கூற்று தயாரித்தல் தொடர்பான அரச கணக்குகள் வழிகாட்டியில் காசுப் பாய்ச்சல் கூற்றுக்குரிய படிவத்தின் பிரகாரம் அது தனியாக காண்பிக்கப்படல் வேண்டும். |

### 1.6.2 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் முறையாக பேணிச் செல்லப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் (குறிப்பு iii) குறிப்பிடப்பட்ட 04 செலவினத் தலைப்பிற்குரிய கூட்டுமொத்தமான ரூபா 75,071 ஆன பொறுப்புக்கள் நிறுவனத்தின் பொறுப்புக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | உரிய ஆண்டிற்காக குறித்துரைத்த ரீதியில் கொண்டுவரப்படுகின்ற பொறுப்புக்கள் மாத்திரம் பொறுப்பு பதிவேட்டில் குறிப்பிடப்படுவதுடன் வருட இறுதியில் ஒரு தடவை மாத்திரம் ஏற்படுகின்ற பொறுப்புக்கள், பொறுப்பு பதிவேட்டில் குறிப்பிடப்படுவதில்லை என அறியத்தருகின்றோம். | சகல பொறுப்புக்களும் பொறுப்பு பதிவேட்டில் பதியப்பட்டு அவை தீர்க்கப்படுகின்ற சந்தர்ப்பத்திலும் அது பதியப்படல் வேண்டும். |
| (ஆ) செலவினப் பேரேட்டில் காண்பிக்கப்பட்ட மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் உள்ள ரூபா 133,175 தொகையான 05 பொறுப்புக்கள் பொறுப்பு பதிவேட்டில் காண்பிக்கப்படாதிருந்த துடன் காண்பிக்கப்பட்ட ஒரு பொறுப்பின் மீதிக்கும் செலவின பேரேட்டில் காண்பிக்கப்பட்ட மீதிக்கும் இடையே ரூபா 651 வேறுபாடு காணப்பட்டது. | பொறுப்புக்கள் பதிவேட்டில் மொபிடல் நிறுவனத்திற்குரிய பட்டியல்களை குறிப்பிடும் போது ரூபா 651 வேறுபாடு ஏற்பட்டிருந்தது என தயவுடன் அறியத்தருகின்றோம். | சகல பொறுப்புக்களும் பொறுப்பு பதிவேட்டில் சரியாக பதியப்பட்டு அந்த பொறுப்புக்கள் தீர்க்கப்படும் போதும் அவை பதியப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையால் 03 செலவின விடயங்களின் மொத்த தேறிய நிதியேற்பாட்டில் 100 சதவீதம் முதல் 94 சதவீதம் | மூலதன செலவின விடயத்தின் நிதியேற்பாட்டின் சேமிப்பானது கொவிட் தொற்றுநோய் காரணமாக | நிதிப்பிரமாணம் 50 இல் காண்பிக்கப்படுகின்ற ஏற்பாடுகளின் பிரகாரம் |

| | | |
|---|---|---|
| வரையிலான வீச்சில் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | நிறுவனம் மூடப்பட்டமையால் கால அட்டவணையின் பிரகாரம் கடமைகளுக்கு வருகை தருதல் மற்றும் எந்தவொரு கொள்வனவுகளுக்காகவும் திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்தின் நிதியேற்பாடு கிடைக்காமை போன்றவை காரணமாக இருந்தது. | சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் சரியான கவனத்துடன் யதார்த்தமான செலவின மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும். |

## 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2021 நவம்பர் 26 ஆந் திகதிய 2021/03 ஆம் இலக்க அரசு கணக்குகள் திணைக்கள சுற்றறிக்கை | | | |
| (i) 3:7 ஆம் பிரிவு | நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சகல பெறுமதிகளும் அண்ணளவான ரூபாயில் அறிக்கையிட வேண்டிய போதிலும், 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றில் தொகைகள் சதப் பெறுமதியுடன் காண்பிக்கப்பட்டிருந்தது. | அறிக்கைகளின் விடயங்களுடன் இணங்குகின்றோம். | 2021.11.26 ஆந் திகதிய 2021/03 ஆம் இலக்க நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான அரச கணக்குகள் வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) 7.6 ஆம் பிரிவு | காசுப்பாய்ச்சல் கூற்று, காசு மற்றும் வரவு பதிவுகள் என்ற இரண்டையும் கவனத்தில் கொண்டு தயாரிக்க | அரச கணக்குகள் திணைக்களத்திலிருந்து கிடைத்த ஆலோசனையின் பிரகாரம் வரவுப் பதிவு | 2021.11.26 ஆந் திகதிய 2021/03 ஆம் இலக்க நிதிக் கூற்றுக்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்ட போதிலும் குறுக்கு பதிவுகள் அகற்றப்பட்டு காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டிருந்தது. | கட்டுநிதி இணக்கக் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. | தயாரித்தல் தொடர்பான அரச கணக்குகள் வழிகாட்டியின் 7.6 ஆம் பந்தியின் பிரகாரம் வரவு பதிவுகளையும் உள்ளடக்கி காசுப்பாய்ச்சல் கூற்று தயாரித்தல் வேண்டும். |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | அரச நிதித் திணைக்களத்தால் விநியோகிக்கப்பட்ட வழிகாட்டி இலக்கம் 14 இல் குறிப்பிடப்பட்ட படிவத்தின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கையின் வரைவு நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்வரும் ஆண்டுகளின் போது அந்த சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுமென தயவுடன் அறியத்தருகின்றோம். | 2020.08.28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கையின் வரைவு நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

### 3.1.1 பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுதல்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மூன்று சட்ட பரிந்துரைகள் தொடர்பாக மீளாய்வாண்டின் போது அமுல்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த பரிந்துரைகளுக்குரிய இறுதி வரைவு நீதியமைச்சருக்கு அனுப்புவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டிருந்தது. | அறிக்கையிடப்பட்ட விடயங்களுடன் இணங்குகின்றோம். | செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பயங்கரவாதத்தை தடுக்கும் சட்டத்தின் வரைவின் சட்டக் கட்டமைப்பை மீளாய்வு செய்தல் 2019 ஆம் ஆண்டிலிருந்தும், விவாகரத்து, பொறுப்பாளர் மற்றும் உயிர்வாழ்தல் வரை சட்ட மறுசீரமைப்பு கலந்துரையாடல் 2018 ஆம் ஆண்டிலிருந்தும் மேற்கொள்ளப்படுகின்றது. | அறிக்கையில் உள்ள விடங்களுடன் இணங்குகின்றோம். | சட்ட மறுசீரமைப்பை காலரீதியாக பாதுகாக்கும் வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | கம்பனிகள் சட்டத்தை திருத்துவதற்குரிய சட்டப் பரிந்துரையின் செயல் முன்னேற்றம் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் செயல்முன்னேற்ற அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | உரிய சட்ட பரிந்துரைகள் தொடர்பாக அறிக்கையிடுவதற்கான அளவில் செயல் முன்னேற்ற அதிகரிப்பினை பெறாமையின் அடிப்படையில் 2020 இன் போது உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | திணைக்களத்தில் இடம்பெறுகின்ற சகல சட்ட மறுசீரமைப்புக்க ளினதும் செயல் முன்னேற்றம் அறிக்கையில் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (ஈ) | ஆணைக்குழுவின் கூட்டங்களை நடாத்துதல் தொடர்பாக கவனத்தில் கொள்ளும் போது 2021 இன் முதலாவது அரை ஆண்டில் கூட்டங்கள் நடாத்தப்படாதிருந்ததுடன் இரண்டாவது அரையாண்டில் 06 கூட்ட தடவைகள் நடாத்தப்பட்டிருந்த போதிலும் குழு அங்கத்தவர் பங்குபற்றல் 48 சதவீதம் அளவிலான குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. அங்கத்தவர்களின் ஐந்து பேர் எந்தவொரு கூட்டத்திலும் பங்குபற்றியிருக்கவில்லை. | சட்ட ஆணைக்குழுவின் விடயம் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் நீதி அமைச்சின் சட்டப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுவதுடன் அந்த பணிகள் இரண்டு இடங்களில் மீளாய்வு செய்யப்பட்டிருந்தது. அதனால் நீதி அமைச்சின் செயலாளரினதும் நீதி அமைச்சரினதும் பங்குபற்றலுடன் இது தொடர்பாக தலைவரை உள்ளடக்கிய சட்ட ஆணையாளர்களுடன் கலந்துரையாடி தீர்மானத்திற்கு உடன்பட்டிருந்தது என அறியத்தருகின்றோம். | திணைக்களத்தின் செயலாற்றல் ஆணைக்குழுவின் செயற்படு நிலையின் அடிப்படையில் மேற்கொள்ளப் படுகின்றமையால் குறித்துரைத்த பிரகாரம் கூட்டங்களை நடாத்தி அதன் செயல் முன்னேற்றத்தை அதிகரித்தல் வேண்டும். |

**3.2 செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 2021 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் நாளதுவரையாக்கப்பட்ட நிறுவனக் கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர், மீளாய்வாண்டிற்குரிய பாதீட்டை அடிப்படையாகக் கொண்டு முன்னுரிமையின் பிரகாரம் செயற்பாட்டுத் திட்டம், அமுல்படுத்தப்பட வேண்டிய கால அட்டவணை மற்றும் கட்டுநிதித் தேவைத் திட்டம் போன்றவை உள்ளடக்கப்படாமையால் அந்த செயல் நடவடிக்கைத் திட்டம் மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | செயல்நடவடிக்கைத் திட்டம் தொடர்பான தகவல்களை வழங்குவது நீதி அமைச்சினால் எங்களுக்கு அனுப்பப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கு இணங்க என அறியத்தருகின்றோம். | 2020.08.28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.3 பெறுகைகள் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| அரசாங்கத்தின் பெறுகைககள் வழிகாட்டிக் கோவையின் 4(2)(2) இன் பிரகாரம் 2021 ஆம் ஆண்டிற்காக விரிவான பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நீதி அமைச்சினால் அனுப்பப்பட்ட ஆலோசனைக் கடிதத்திற்கு இணங்க பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. நல்லாளுகை

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2019 சனவரி 12 ஆந் திகதிய DMA/01-2019 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் சுற்றறிக்கையின் விபரிக்கப்பட்ட பிரகாரம் நிதிப் பிரமாணம் 134 மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 40(3) பிரிவின் பிரகாரம் நிறுவனத்தில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வு நீதி அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு பிரிவினால் மேற்கொள்ளப்படுவதுடன் 2021 ஆம் ஆண்டில் காணப்பட்ட கொவிட் தொற்றுநோய் நிலைமை, உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளாமைக்கான காரணமாக இருந்ததை குறிப்பிடுகின்றோம். உள்ளகக் கணக்காய்வை நடாத்துதல் எமது திணைக்களத்திற்குரிய பணியாக இல்லாதிருந்தமையையும் அறியத்தருகின்றோம். | உரிய ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 5. மனிதவள முகாமைத்துவம்

### 5.1 வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கையில் கைச்சாத்திடல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2018 சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் நிறுவனத்தில் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற ஒட்டுமொத்த பதவியணியினர்களுக்காகவும் வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | அறிக்கையின் விடயங்களுடன் இணங்குகின்றோம். | 2018.01.24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 5.2 நியமிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர்

| கணக்காய்வு அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 13.3 ஆம் பிரிவின் பிரகாரம் பதிற்கடமை மேற்கொள்ளப்படுவது உண்மையான பதவியொன்றை நியமிக்கும் வரை தற்காலிக பதலீடாக இருந்த போதிலும் 2014 ஆம் ஆண்டு முதல் வெற்றிடமாக காணப்படுகின்ற செயலாளர் பதவிக்காக இந்த அறிக்கைத் திகதி வரையிலும் உள்ளபடியான நியமனம் விழங்கப்பட்டிருக்கவில்லை | செயலாளர் பதவியின் வெற்றிடத்தை நிரப்புவதற்கு நீதி அமைச்சினால் முயற்சி எடுக்கப்பட்ட போதிலும் அதற்கு தேவையான தொழிற்தகைமை மற்றும் தொழில்சார் சேவைக்காலத்தை பூர்த்தி செய்த பொருத்தமான விண்ணப்பதாரர்கள் முன்வராமையால் அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு முடியாதிருந்தது. | தாபன விதிக் கோவையின் பிரகாரம் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நிறுவனத்தின் பதவியணியினரில் அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 29 ஆக இருந்த போதும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்ளபடியான பதவியணியினர் 18 ஆனமையால் ஒட்டுமொத்த பதவியணியினர் வெற்றிடங்களின் எண்ணிக்கை 11 ஆகும். | தற்போதும் செயலாளர் பதவி முழு நேர உத்தியோகத்தர் ஒருவர் கடமையை நிறைவேற்றுவதுடன் ஏனைய பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | தேவையான பதவிகளின் வெற்றிடங்களை விரைவாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |